முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 9/2019

இன்று 2025 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பத்மநாபன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பிரமணியம் | கிராமம் | : 15 வேலம்பாளையம் |
| வயது | : 69 | தாலூக்கா | : |
| நாள் | : 18-02-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) பிரதிவாதிகளின் மூதாதையர்களின் மொத்தச் சொத்துக்களில் இரண்டு பகுதி முருகைய ஜோதிடர், தம்பண கவுண்டர், பொன் சிவலை செட்டியார் ஆகியோருக்கு கிடைக்கப்பட்டுள்ளது. பொன் சிவலை செட்டியார் என்னுடைய பாட்டனார் தம்பண கவுண்டருக்கு கிரையம் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். கடந்த 1958ம் வருடம் தம்பண கவுண்டரின் மக்களுக்கு இடையில் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) கடந்த 1958ம் வருடத்திய பாகப்பிரிவினையில் சுப்பிரமணிய கவுண்டருக்கு ஏ செட்யூல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள தடமானது அதிலுள்ள தரப்பினர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்ட வாசகங்கள் எதுவும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1

ஆவணத்தில் குறிப்பிட்டு அவ்வாறான வாசகங்கள் இல்லை என்றாலும், அதன்பின்னிட்டு ஏற்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தில் வாசகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

3) தாவா சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில் இல்லாத உரிமையை இருப்பதாக காட்டி, ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது சொத்துக்கு மேற்குபுறத்தில் க.ச.எண்.253 பூமி உள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.253 ல் நிறைய கிரையங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 09,03,2006 ம் தேதி கோமதி பொன்னுச்சாமி என்பவருக்கு ஏற்படுத்திய கிரைய பத்திரத்திலும், தாவா பாதை பொது தடமாக காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) க.ச.எண்.454 க்கு வடபுறமாக உள்ள க.ச.எண். 453 ன் உரிமையாளர்களுக்கும் தாவா தடம் பொது தடமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. க.ச.எண்.454 க்கான அ பதிவேடு விவரங்களிலும் தாவா தடமானது, கூட்டு வண்டிப்பாதை, பழனிச்சாமி மற்றும் 4 நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிழமேல் வண்டித்தடம் ஒயிட் கிளவுட்ஸ் பள்ளி வரை செல்கிறது என்றால் இல்லை.

5) அதேபோல் கிழமேல் வண்டித்தடம் திருப்பூர் பிரைவேட் டெக்ஸ்டைல்ஸ் ரோடு வரை செல்கிறது என்றால் இல்லை. எனது பூமிக்கு கிழக்கில் இருக்கக் கூடிய பொது கிணற்றிற்கும் தாவா பாதை தான் பொது வழி என்றால் இல்லை. கடந்த 1926 ம் வருடத்திற்கு முன்பு தாவா தடம் பொதுவாக உபயோகப்படுத்தப்பட்டது என்றாலும், தாவா தடத்தை

ஆக்கிரமிக்க பொய்யான விவரங்களுடன் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6) அருகிலுள்ள உள்ள நிலத்தின் உரிமையாளர்களை வழக்கில் கட்சி சேர்க்காததாலும், தடம் அவர்களுக்கும் பொது தடம் என்பதாலும், என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனவே தாவா பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

PRAVEEN KUMAR T

Digitally signed by PRAVEEN KUMAR T
Date: 2025.02.18 15:34:30 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.